**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்**

**சுகாதார மற்றும் ஊடக அமைச்சு**

**வெற்றிடமான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்**

1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 14853/3 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1969இல் நிறுவப்பட்ட இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தகுதியுள்ள உள்வாரி மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பிரதான மருத்துவ அதிகாரி - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) - பதவி 01**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவைச்சிகிச்சை தொடர்பான பட்டம்.

அத்துடன்

உரிய துறையில் முதுகலை பட்டம் (Masters) பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" உள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் தொடர்புடைய துறையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்

**02. உதவிப் பொது முகாமையாளர் (தொழிற்சாலை) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) - பதவி 01**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரவியல் பொறியியல் / உற்பத்திப் பொறியியல் தொடர்பான பட்டம்.

அத்துடன்

தொடர்புடைய துறையிலான முதுகலை பட்டம் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவிக்குரிய பாடத்துறைக்குச் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இணை உறுப்பினர் தகுதியைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" உள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் தொடர்புடைய துறையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

## 03. உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வணிக நிர்வாகம் / வணிக முகாமைத்துவம் / வணிகவியல் ஆகிய பாடங்களில் பெற்ற பட்டம்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையிலான முதுகலை பட்டம் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவிக்குரிய பாடத்துறைக்குச் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இணை உறுப்பினர் தகுதியைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" உள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் தொடர்புடைய துறையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

## 04. உதவிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / சட்டம் / வணிக முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வணிக நிர்வாகம் ஆகியவற்றிலான பட்டம்.

**அத்துடன்**

தொடர்புடைய துறையில் முதுகலை பட்டம் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவிக்குரிய பாடத்துறைக்குச் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இணை உறுப்பினர் தகுதியைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" உள்ள பதவியொன்றில் குறைந்தபட்சம் தொடர்புடைய துறையில் 15 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

## HM 1-1 சேவை வகுதிக்காக:

**தகைமைகள்**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 01 அல்லது 02):**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ சேவை (MM) வகுதியின் தரம் I பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் தொடர்புடைய துறையில் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

35 வயதுக்குக் குறையாததாகவும் 55 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்:**

HM 1-1 - ரூ. 140,640 - 15 x 4,100 - 202,140/- எனும் சம்பளத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 123,019.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார்.

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 123,019/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 140,640/-

**இதற்குரிய மேலதிக படிகள்:**

- தொழில்முறை படி
- வாழ்க்கைச் செலவு படி
- மொழித் தேர்ச்சி படி
- போக்குவரத்து படி
- தொலைபேசி படி
- ஏனைய படிகள்

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

## 5. மருத்துவ அலுவலர் - முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-3) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவைச்சிகிச்சை தொடர்பான பட்டம்.

   அத்துடன்

   பட்டத்தைப் பெற்ற பின்னர் பதவிக்குரிய துறையில் 01 வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2):**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. "கனிஷ்ட முகாமைத்துவம்" JM 1-1 சேவை வகுதியில் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

22 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லைப் பொருந்தாது.

**சம்பளம்:**

MM 1-3 - ரூ. 96,650 - 10 x 2,480 - 15 x 3,450 - 173,200/- எனும் சம்பளத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 85,896.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார்.

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 85,896/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 96,650

## 06. முகாமையாளர் (தொழிற்சாலை) - முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1) - பதவி 01

**தகைமைகள்**
**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் இலங்கை பொறியியல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட 04 வருட முழுநேர விஞ்ஞானமானி பொறியியல் பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதற்குச் சமமான வேறு கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

மற்றும்

2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியல் பேரவையில் இணைப் பொறியாளராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் மற்றும் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 07. முகாமையாளர் (ஆகுசெலவு) - முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2):**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக முகாமைத்துவம் / கணக்கியல் / வணிகவியல் / வணிக நிர்வாகம் / நிதி முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் பெறப்பட்ட பட்டம்.

   மற்றும்

   பட்டத்தைப் பெற்ற பின்னர் அரசாங்க அல்லது பகுதியளவு அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ஆகுசெலவு கணக்கீட்டுக்குரிய பதவிநிலை உத்தியோகத்தர் மட்டத்திலான பதவியொன்றில் குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

2. இலங்கையின் பட்டய தொழில்முறை நிறுவனமொன்றின் இடைநிலைத் தேர்வில் (Intermediate Level) சித்தியடைந்திருத்தல்.

   மற்றும்

   அத்தகுதியைப் பெற்ற பின்னர் அரசாங்க அல்லது பகுதியளவு அரச நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது நிதி முகாமைத்துவத் துறைக்குரிய பதவிநிலை உத்தியோகத்தர் மட்டத்திலான பதவியொன்றில் குறைந்தபட்சம் 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**MM 1-1 சேவை வகுதிக்காக:**

**தகைமைகள்**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2):**

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. "கனிஷ்ட முகாமைத்துவம்" JM 1-1 சேவை வகையில் தொடர்புடைய துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

22 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்:**

MM 1-1 - ரூ. 91,690 - 10 x 2,480 - 15 x 3,450 - 168,240/- சம்பள அளவுத்திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 81,710.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார்.

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 81,710/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 91,690/-

**08. உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு) - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) - பதவிகள் 02**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம் / சந்தைப்படுத்தல் / வணிகவியல் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   தகுதியைப் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சந்தைப்படுத்தல் துறையில் இரண்டு (02) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2):**

1. மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2. முகாமைத்துவம் உதவித் தொழில்நுட்பமற்ற (MA 1-1) சேவை வகுதியின் தரம் II இல் விற்பனைத் துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**09. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல் / மின்சாரம்) - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) - பதவி 01**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 04 அல்லது 05):**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியல் விசேட பாடத்துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (இயந்திரவியல் அல்லது மின்சாரம்) (NDT) பெற்றிருத்தல்.
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்தகைமையின் (N.V.Q.) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   அத்துடன்

   தகுதியைப் பெற்ற பின்னர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இயந்திரவியல் அல்லது மின்சாரத் துறையில் இரண்டு (02) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்தகைமையின் (N.V.Q.) ஆறாம் (06) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

   **அத்துடன்**

   தகுதியைப் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் ஐந்து (05) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்தகைமையின் (N.V.Q.) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

தகுதியைப் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் பத்து (10) வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 01 அல்லது 02):**

1. மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப (MA 2-1) சேவை வகுதியின் தரம் II இல் இயந்திரவியல்/மின்சாரத் துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

## 10. தரக்கட்டுப்பாட்டு அலுவலர் - கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM 1-1) - பதவி 01

**<u>தகைமைகள்</u>**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல் / பௌதிகவியல் / உயிரியல் / உணவுத் தொழில்நுட்ப பட்டத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தகுதியைப் பெற்ற பின்னர் அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிச்சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தின் ஆய்வுகூடத்தில் தொடர்புடைய துறையில் இரண்டு வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 01 அல்லது 02):**

1. மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவித் தொழில்நுட்பமற்ற (MA 1-1) சேவை வகுதியின் தரம் II இல் தரக்கட்டுப்பாட்டுத் துறையிலான பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

Gazette.lk

**JM 1-1 சேவை வகுதிக்காக:**

**வயது:**

22 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

**சம்பளம்:**

JM 1-1 - ரூ. 72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970/- சம்பள அளவுத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 65,633.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார் (01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக).

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 65,633/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 72,650/-

## 11. தொழில்நுட்ப உதவியாளர் (மின்சாரம்) - முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவை வகுதி (MA 2-1) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பதவிக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்தகைமை N.V.Q. ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத மின்சார தொழில்நுட்ப பாடநெறியைப் பயின்று தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மின்சாரப் பணியாளராக குறைந்தபட்சம் இரண்டு வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து நடைமுறை அனுபவத்தைப் பெற்றிருப்பது மேலதிகத் தகுதியாகக் கருதப்படும்.

## 12. தொழில்நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்) - முகாமைத்துவ உதவி - தொழில்நுட்ப சேவை வகுதி (MA 2-1) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பதவிக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்தகைமை N.V.Q. ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத இயந்திரவியல் தொழில்நுட்ப பாடநெறியைப் பயின்று தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இயந்திரவியல் பணியாளராக குறைந்தபட்சம் இரண்டு வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்து நடைமுறை அனுபவத்தைப் பெற்றிருப்பது மேலதிகத் தகுதியாகக் கருதப்படும்.

## 13. கணக்குப் பதியுநர் - முகாமைத்துவ உதவி - தொழில்நுட்ப சேவை வகுதி (MA 2-1) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

பதவிக்கு ஏற்றவாறு மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேசிய தொழிற்தகைமை நிதி / கணக்கீட்டியல் / கணக்கியல் / வணிகவியல் தொடர்பான தேசிய தொழிற்தகைமை N.V.Q. ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத உயர் கல்விப் பாடநெறியைப் பயின்று தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணக்குப் பதியுநரின் கடமைகள் தொடர்பில் குறைந்தபட்சம் இரண்டு வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருப்பது மேலதிகத் தகுதியாகக் கருதப்படும்.

**MA 2-1 சேவை வகுதிக்காக:**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**

மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகள் ஏற்புடையதாகும்.

**வயது:**

18 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரருக்கு உச்ச வயது எல்லை பொருந்தாது.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**சம்பளம்:**

MA 2-1 - ரூ. 50,540 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - 87,710/- சம்பள அளவுத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 46,960.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார் (01/2025 ஆம் இலக்க முகாமைத்துவம் சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக).

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 46,960/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 50,540/-

**14. முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் (பொதியிடல் பரிசோதகர்) - முகாமைத்துவ உதவி (தொழில்நுட்பமற்ற) சேவை வகுதி (MA 1-1) - பதவி 01**

**தகைமைகள் (கட்டாயப் பொதுத் தகைமைகள்):**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

**கல்வி:**

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்,

1. சிங்களம் / தமிழ்
2. கணிதம்
3. ஆங்கில மொழி (பதவியின் கடமைகளுக்கு ஏற்ப தேவைப்படின் மாத்திரம்)

ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரிய ஏனைய விசேட தகைமைகள்: பொதியிடல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பாடநெறியைப் பயின்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

(கணினி வார்த்தை செயலாக்கம் / தட்டச்சு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியைப் பயின்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான மட்டத்திலான திறமைகள் உரிய சந்தர்ப்பங்களில் தகைமைகளாகச் சேர்க்கப்படலாம்).

**15. நிலையப்பொறுப்பு அலுவலர் (களஞ்சியம் / விற்பனை நிலையம்) - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) சேவை வகுதி (MA 1-1) - பதவிகள் 04-** *( நாடு முழுவதும் உள்ள இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகளுக்கு இணைக்கப்படுவர்)*

**தகைமைகள் (கட்டாயப் பொதுத் தகுதிகள்):**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

<u>கல்வி</u>

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்,

1. சிங்களம் / தமிழ்
2. கணிதம்
3. ஆங்கில மொழி (பதவியின் கடமைகளுக்கு ஏற்ப தேவைப்படின் மாத்திரம்)

ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரிய ஏனைய விசேட தகைமைகள்:

அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் களஞ்சியப் பராமரிப்பு தொடர்பான பாடநெறியைப் பயின்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் ஒரு வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

(கணினி வார்த்தை செயலாக்கம் / தட்டச்சு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியைப் பயின்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான மட்டத்திலான திறமைகள் உரிய சந்தர்ப்பங்களில் தகைமைகளாகச் சேர்க்கப்படலாம்).

**16. நிலையப்பொறுப்பு அலுவலர் (மூலிகைத் தோட்டங்கள்) - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) சேவை வகுதி (MA 1-1) - பதவி 01**

**தகைமைகள் (கட்டாயப் பொதுத் தகுதிகள்):**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

<u>**கல்வி**</u>

(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்,

1. சிங்களம் / தமிழ்
2. கணிதம்
3. ஆங்கில மொழி (பதவியின் கடமைகளுக்கு ஏற்ப தேவைப்படின் மாத்திரம்)

ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்து) சித்தியடைந்திருத்தல்.

(இ) பதவிக்குரிய ஏனைய விசேட தகைமைகள்:

விவசாயம் தொடர்பான பாடநெறியைப் பயின்றிருத்தல் (உயர் தரத்தில் விவசாய விஞ்ஞான் துறையில் சித்தியடைந்தவர்களுக்கு இது பொருந்தாது).

**அத்துடன்**

(கணினி வார்த்தை செயலாக்கம் / தட்டச்சு தொடர்பான மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறியைப் பயின்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான மட்டத்திலான திறமைகள் உரிய சந்தர்ப்பங்களில் தகைமைகளாகச் சேர்க்கப்படலாம்).

**MA 1-1 சேவை வகைக்காக:**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**

(அ) ஆரம்பத் தரம் - கைவினைச்சார்பற்ற, பகுதியளவு கைவினைச்சார்பு மற்றும் கைவினைச்சார்பு சேவை வகுதிகளில் பின்வரும் 'ஆ', 'இ' மற்றும் 'உ' ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்,

i. சிங்களம் / தமிழ்
ii. கணிதம்
iii. ஆங்கில மொழி (பதவியின் கடமைகளுக்கு ஏற்ப தேவைப்படின் மாத்திரம்)

ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

(இ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருப்பதுடன், அந்நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) குறிப்பிட்ட திகதிக்கு கிட்டியதாக நிரந்தர நியமனமொன்றில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**

யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆற்றிய சேவை அல்லது யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கான நிபந்தனையாக ஆற்றிய பயிற்சிப் காலம் மேலே 'ஈ' பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிபெறும் 5 வருட காலப்பகுதிக்குக் கணக்கில் கொள்ளப்படமாட்டாது. யாதேனுமொரு பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆற்றிய தற்காலிக/அமய சேவைக் காலம் மேலே 'உ' பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிபெறும் 05 வருட காலப்பகுதிக்குக் கணக்கில் கொள்ளப்படமாட்டாது.

**வயது**

18 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது எல்லைப் பொருந்தாது.

**சம்பளம்:**

MA 1-1 - ரூ. 46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - 83,390/- சம்பள அளவுத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 43,312.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார் (01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக).

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 43,312/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 46,220/-

## 17. சாரதி – ஆரம்பத் தேர்ச்சி சேவை வகுதி (PL-3) - பதவிகள் 03

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

**கல்வித் தகுதிகள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**தேர்ச்சி:**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட "D" பிரிவு மோட்டார் வாகனச் சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல். மோட்டார் வாகனச் சாரதி உரிமம் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட "D" பிரிவுக் கனரக மோட்டார் வாகனச் சாரதி உரிமத்தைப் பெற்றிருத்தல். மோட்டார் வாகனச் சாரதி உரிமம் பெற்ற பின்னர் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

ஆரம்ப பகுதியளவு கைவினைச்சார்பு (PL 2) அல்லது ஆரம்ப கைவினைச்சார்பற்ற (PL 1) சேவை வகுதியில் ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:**

18 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரருக்கு உச்ச வயது எல்லைப் பொருந்தாது.

**சம்பளம்:**

PL 3 - ரூ. 43,280 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 67,040/- சம்பள அளவுத்திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 40,834.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார் (01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக).

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 40,834/-
2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 43,280/-

**18. இயந்திர பொறிமுறை இயக்குநர் - ஆரம்ப - பகுதியளவு தேர்ச்சி சேவை வகுதி (PL-2) - பதவிகள் 03**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் இயந்திரம் மற்றும் இயந்திரங்களை இயக்குதல் தொடர்பாக வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை (N.V.Q.) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

## 19. கொதிகலன் இயக்குநர் (Boiler Operator) - ஆரம்ப - பகுதியளவு தேர்ச்சி சேவை வகுதி (PL-2) - பதவி 01

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் கொதிகலன் இயக்குதல் தொடர்பாக வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை (N.V.Q.) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**PL-2 சேவை வகுதிக்காக:**

**தகைமைகள்**

**உள்வாரி விண்ணப்பதாரர்கள்:**

1. தொடர்புடைய துறையில் ஐந்து (05) வருட அனுபவம் மற்றும் தொழிற்கல்விக் கல்லூரியொன்றினால் / தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் அப்பதவியின் கடமைகளுக்கு அமைவாக நடாத்தப்படும் தொழிற்பரீட்சை (Trade Test) மூலம் உறுதிப்படுத்தப்படும் தேசிய தொழிற்தகைமை (N.V.Q.) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சியைக் கொண்ட ஆரம்ப கைவினைச்சார்பற்ற (PL 1) சேவை வகையினைக் சேர்ந்த ஊழியர்கள்.
2. பதவிக்கு அமைவாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை (N.V.Q.) இரண்டாம் (02) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயது:**

18 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரருக்கு உச்ச வயது எல்லைப் பொருந்தாது.

**சம்பளம்:**

PL-2 - ரூ. 42,300 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - 66,060/- சம்பள அளவுத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 40,008.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார் (01/2025 ஆம் இலக்க முகாமைத்துவம் சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக).

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 40,008/-

2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 42,300/-

**20. சாரதி உதவியாளர் - ஆரம்ப - தேர்ச்சியற்ற சேவை வகுதி (PL-1) - பதவி 01**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.

**21. உற்பத்தி உதவியாளர் / விற்பனை உதவியாளர் - ஆரம்ப - தேர்ச்சியற்ற சேவை வகுதி (PL-1) - பதவிகள் 04**

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்.

**PL-1 சேவை வகுதிக்காக:**

**வயது:**

18 வயதுக்குக் குறையாததாகவும் 45 வயதுக்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்:**

PL-1 - ரூ. 40,500 - 10 x 450 - 10 x 490 - 7 x 540 - 15 x 590 - 62,530/- சம்பள அளவுத் திட்டத்தில் 2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளப் படிநிலையான ரூ. 38,488.00, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் படிகளுக்கும் உரித்துடையவராவார் (01/2025 ஆம் இலக்க முகாமைத்துவம் சேவைகள் சுற்றறிக்கைக்கு அமைவாக).

2026.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 38,488/-

2027.01.01 ஆம் திகதிக்குரிய ஆரம்பச் சம்பளம் - ரூ. 40,500/-

## பொது விடயங்கள்

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:

i. இலங்கைச் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

ii. பதவிக்குரிய கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவை செய்வதற்கும் தேவையான உடற்தகுதி மற்றும் உளத்தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நல்லொழுக்கத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

## ஆட்சேர்ப்பு முறை:

I நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட/தொழில்முறை நேர்முகப் பரீட்சை மூலம் கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

ii. நியமனம் பெறுபவர்களிடமிருந்து 8% மற்றும் சேவை வழங்குநரிடமிருந்து 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்பாகச் செலுத்தப்படும். அதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு நியமனம் பெறுபவரின் சம்பளத்தில் 3%க்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

## விண்ணப்பிக்கும் முறை:

i. மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும்போது கவனத்தில் கொள்ளப்படும் தகைமைகள் மற்றும் அது தொடர்பான அனைத்து விபரங்களையும் இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் **www.sladc.lk** எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குச் செல்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

ii. பத்திரிகை அறிவித்தலுக்கு அமைவாக உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் மூலம் பதவிக்கு விண்ணப்பிக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

iii. அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தத்தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

iv. விண்ணப்பக் கடிதம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

v. மேலே உள்ள பல பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தனித்தனியாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

vi. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி **2026.10.06** ஆகும். முறைப்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அத்திகதியிலோ அல்லது அத்திகதிக்கு முன்னரோ **தலைவர், இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம** எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

vii. மேலும் தாமதமாகக் கிடைக்கும், பூர்த்தி செய்யப்படாத, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத மற்றும் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையை

சான்றிதழ் பிரதிகள் மூலம் உறுதிப்படுத்தாத, முறைப்படி சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

viii. தபாலில் தவறவிடும் அல்லது தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் எமது கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காது.

குறிப்பு: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது மேலே உள்ள ஆட்சேர்ப்பு தொடர்பான வேறு விடயங்கள் தொடர்பில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படின், அது பற்றிய விபரங்கள் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இற்றைவரைப்படுத்தப்படும்.

**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்,**
**நாவின்ன, மகரகம**
2026.09.23

**கீதாமணி சி. கருணாரத்ன,**
தலைவர்,
இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்.

Gazette.lk AMBITIONS REALIZED